புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM
• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுன் (JUNE) 25, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 26 • விலை(PRICE) ரூ.6.00

# கருத்து செறிவுடன் நடந்த கழக இளைஞரணி பயிலரங்கம்



**சேலம் மாவட்டக் கழக இளைஞரணி நடத்திய இரண்டு நாள் பயிலரங்கத்தில் எண்பது இளைஞர்கள் பெண்களும், ஆண்களுமாய் பங்கேற்றனர். கால மாற்ற சூழலில் பெரியார் கருத்தியல் மற்றும் பெரியார் இயக்கத்தின் தேவை குறித்து பயிலரங்கம் விரிவாக விவாதித்தது.**

சேலம் மாவட்ட இளைஞர் அணி பயிலரங்கம் ஜுன்20,21 தேதிகளில் சேலம் நிலாச்சோறு உணவக அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. 20.06.2026 சனிக்கிழமை இளைஞர்களின் எழுச்சியோடு தொடங்கியது. தோழர்கள் லதா, சத்யா, பொன்ராஜ், உமாபதி குழுவினரின் கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்வு தொடங்கியது.

தொடர்ந்து "இன்றைய சமூக அரசியல் சூழலில் பெரியாரியத்தின் தேவை" என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முதல் வகுப்பினை தொடங்கினார்.

தேநீர் இடைவேளைக்கு பிறகான இரண்டாவது அமர்வில் "சமூக ஊடகங்கள் - பயன்படுத்தல்" என்ற தலைப்பில் ( Wild South Raiders podcast) தோழர் கக்காஷி காணொளி மூலமாக விளக்கி வகுப்பெடுத்தார். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகான மூன்றாவது அமர்வில் "ஜாதியத்தின் புதிய வடிவம்: சுயஜாதி மறுப்பு பார்ப்பனிய எதிர்ப்புடன் ஜாதி மறுப்பு இயக்கம்" என்ற தலைப்பில் கழக தாம்பரம் நகர அமைப்பாளர் அருண்கோமதி வகுப்பெடுத்தார்.

மாலை தேநீர் இடைவேளைக்குப் பிறகான நான்காவது அமர்வில் "வாழ்க்கை முறையில் சடங்குகளின் தாக்கம்: அதன் வழியே நிலை நிறுத்தப்படும் மடமை,இழிவு" என்ற தலைப்பில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி வகுப்பெடுத்தார். முதல் நாள் கடைசி அமர்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி "பெரியாரின் போராட்டங்கள் - இலக்கு - அணுகுமுறை" என்ற தலைப்பில் வகுப்பெடுத்தார்.

முதல் நாள் வகுப்பில் 80 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இதில் 50-க்கும் மேற்பட்ட புதிய தோழர்கள் பங்கேற்றனர். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி 79-வது பிறந்தநாள் விழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதில் 150க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**2-ம் நாள்:** தோழர்கள் லதா, சத்யா, பொன்ராஜ், உமாபதி குழுவினரின் கலை நிகழ்ச்சிகளுடன் வகுப்பு தொடங்கியது. தொடர்ந்து "பார்ப்பனியம்: தத்துவமாய், அதிகார மையமாய் ஊடகங்களில், அரசாங்கத்தில், மதத்துறையில் செலுத்தும் ஆதிக்கம் -கோட்பாடாக புரிந்துகொள்ளல்" என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முதல் வகுப்பினைத் தொடங்கினார்.

தேநீர் இடைவேளைக்குப் பிறகான இரண்டாவது அமர்வில் "பெரியாரும், தேர்தல் அரசியலும் - சமூக மாற்றத்தின் வழியாக அரசியல் மாற்றம்" என்ற தலைப்பில் திருப்பூர் மகிழவன் உரை நிகழ்த்தினார். மதிய உணவு இடைவேளைக்கு பிறகான மூன்றாவது அமர்வில் "திராவிடர் விடுதலைக் கழகம் - 2012 முதல் இன்று வரை செயல்பாடுகள் - முன்னெடுப்புகள்" என்ற தலைப்பில் கழக பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரை நிகழ்த்தினார். தேநீர் இடைவேளைக்கு பிறகான கடைசி அமர்வில் "சுயமரியாதை இயக்கம்: செயல்பாடு - அணுகுமுறை" என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வகுப்பெடுத்தார்.

நிறைவாக, "அய்யம் களைதலில்" தோழர்களின் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் ஆதாரத்துடன், வரலாற்றுக் குறிப்புகளுடன், எளிமையான விளக்கத்துடன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறந்த முறையில் பதிலளித்தார்.

சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன் நன்றி கூற பயிலரங்கம் நிறைவு பெற்றது. பயிலரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வுக்கு உழைத்திட்ட சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் தங்கதுரை, சிவ சண்முகம், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், தமிழ்நாடு மாணவர் கழகம் நாகராஜ், கவியரசு, கொங்கணாபுரம் கோகுலக் கண்ணன், மேட்டூர் முத்துராஜ், இரண்யா, மேச்சேரி சபரி குறிப்பாக இவ்வளவு சிறப்பான நிகழ்வு நடைபெற காரணமாக இருந்த நிலாச்சோறு உரிமையாளர் ரகுநாத் - கவிதா ஆகியோருக்கும் மற்றும் கழக தோழர்கள், நிர்வாகிகள் மற்றும் கலந்து கொண்ட அனைத்து புதிய தோழர்களுக்கும் சேலம் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.




### பயிலரங்கில் உணர்வூட்டிய புரட்சிப் பாடல்கள்

தோழர்கள் லதா, சத்யா, பொன்ராஜ், உமாபதி குழுவினர் பயிலரங்கத்தில் உணர்வூட்டும் கொள்கைப் பாடல்களை பாடினர். ஒவ்வொரு உரையின் இடைவெளியில் பாடப்பட்ட பாடல்கள் பயிரங்கில் பெரும் வரவேற்பை பெற்றன.

### உணவக உரிமையாளரின் பேருதவி

நிலாச்சோறு உணவகம் திறந்த வெளியில் அழகிய குடில்களாக கலை உணர்வுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. பயிலரங்க அரங்கு எதிரொலி சிறிதும் இன்றி மிகச்சிறப்பாக அமைந்திருந்தது.

உணவக உரிமையாளர் ரகுநாத் இரண்டு பயிலரங்கிலும் முழுமையாக இருந்து அனைத்து உதவிகளையும் செய்தார். இந்த பயிலரங்கம் தனது உணவகத்தில் நடப்பது எனக்கு பெருமை சேர்த்துள்ளது என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

### வாஸ்து மடமையை தகர்த்து வெற்றிநடைபோடும் நிலாச்சோறு உணவகம்

நிலாச்சோறு உணவக உரிமையாளர் ரகுநாத் நிகழ்வின் இறுதியில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எந்தவித அரசியல் அடையாளம் இல்லாமல் இந்த உணவகத்தை நடத்தி வருகிறேன். அடையாளம் இல்லை என்றாலும் அனைவருக்கும் தெரியும் நான் பெரியாரிஸ்ட் என்று, எந்த ஒரு இயக்கத்திலும் நான் பயணிக்கவில்லை. இந்த உணவகத்தை வாஸ்து சாஸ்திர முறைக்கு நேர் எதிராகக் காட்டியுள்ளேன். கோடிக்கணக்கான ரூபாயில் உணவகத்தைக் கட்டுகிற என்னை பார்த்து ஒரு 20 இலட்சம் ரூபாய்க்கு வீடு கட்டுபவர் யோசிப்பார். நான் தற்போது கட்டி வருகிற கட்டிடத்தில் அனைத்து வாஸ்து சாஸ்திர அமைப்புக்கு நேர் எதிராக கட்டுமானப் பணிகளை செய்து வருகிறேன். குபேர மூலையில் கழிவறையும் சனி மூலையில் கழிவறை தொட்டியையும் அமைத்துள்ளேன்.

நான் என்னுடைய வீட்டிலும் பல்வேறு சடங்கு முறைக்கு எதிராக செய்து வந்துள்ளேன். வீட்டில் புதுமனை புகுவிழாவில் பால் காய்ச்சுவதற்கு மாற்றாக பாகற்காய் குழம்பு வைத்து சாப்பிட்டோம். இனிப்பு இல்லாமல் புதுமனை புகுவிழா நடந்தது. எனது இணையர் குடும்பப் பிண்ணனி சடங்குகள், ஜோசியம் சார்ந்து தான் இருந்தது. ஆனால் இப்போது அவர் பகுத்தறிவு சிந்தனைக்கு வந்துள்ளார். ஆகவே எனது இணையருக்கு நன்றி!

தொடர்ச்சி 3-ம் பக்கத்தில்

**தலையங்கம்**

## ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அதிகார வன்முறை

"ஆர்.எஸ்.எஸ். தொடங்கி 100 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் எந்த சட்டத்தின் கீழும் அந்த அமைப்பு பதிவு செய்யப்படவில்லை.பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்."இந்து மதம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா?" என்ற ஒரு எதிர் கேள்வியை இறுமாப்புடன் அவர் எழுப்புகிறார்.

கர்நாடக மாநிலத்தில் 20 லட்சம் சேவக்குகளை தங்கள் அமைப்பு வழியாக உருவாக்கி இருப்பதாக அண்மையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உயர்மட்ட பிரிவான பாரதிய பிரதிநிதி சபா அறிவித்ததைத் தொடர்ந்து, கர்நாடக மாநில அரசின் சார்பில் உள்துறை அமைச்சர் பிரியங் கார்கே ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்துக்கு அரசு சார்பில் ஒரு கடிதம் எழுதினார். ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சட்ட பூர்வ நிலை, திரட்டும் நன்கொடைகள் செலுத்தும் வரிகள் குறித்த விவரங்களை அதில் கேட்டிருந்தார். "இதற்கு பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் எந்த சட்டத்தின் கீழும் பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை இந்து மதம் என்ன பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?" என்று மோகன் பகவத் போகிற போக்கில் ஒரு செய்தியாளரிடம் கருத்து கூறியிருக்கிறார். இது ஒரு மாநில அரசு எழுப்பும் கேள்வி என்பதால் மோகன் பகவத் கட்டாயம் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்று கர்நாடகா உள்துறை அமைச்சர் பதிலளித்திருக்கிறார்.

அண்மையில் தனது தலைமை அலுவலகத்தை நாக்பூரில் இருந்து டெல்லிக்கு மாற்றிய ஆர்.எஸ்.எஸ். அதற்கு செலவிட்ட தொகை ரூ.250 கோடி. எந்த சட்டப் பதிவும் இல்லாத இந்த மாளிகையை திறக்கும் சடங்கு நிகழ்ச்சிகளில் உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜக தலைவர் நட்டா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள். சட்டப்படி பதிவு செய்ய மாட்டோம் என்று இறுமாப்புடன் அறிவிக்கக்கூடிய துணிச்சல் ஆர்.எஸ் எஸ்-க்கு எப்படி வந்தது? இதுதான் பார்ப்பனியத்தின் அதிகார வன்முறை.

தொண்டு நிறுவனங்களாக அறிவித்துக் கொள்ளும் அமைப்புகள் சட்டப்படி பதிவு செய்தால்தான் நன்கொடைகள் திரட்ட முடியும். ஆனால் ஆர்.எஸ்.எஸ் கோடிக்கணக்கில் நன்கொடை திரட்டுகிறது. சட்டப் பதிவுகள் ஏதும் இல்லாமல் தொண்டு நிறுவனங்களாக அடையாளப்படுத்திக் கொள்ளும் அமைப்புடன் பிரதமரும், அமைச்சர்களும் அவர்களின் தலைமை அலுவலகத்துகே சென்று எப்படி பேச முடிகிறது? சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் இவர்களை சந்தித்து எப்படி உரையாற்ற முடிகிறது? பார்ப்பனியத்தின் அதிகாரத்தை எந்த சட்டதிட்டத்திற்குள்ளும் இந்தநாட்டில் அடைக்கி வைக்க முடியாது என்பதால் தானே?

காந்தியார் கொலைக்குப் பிறகு தடைசெய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ் மீண்டும் தடை நீக்கம் செய்யப்பட்டது. அப்போது ஆர்.எஸ்.எஸ் தனது அமைப்பு உறுப்பினர்களின் பதிவேட்டை உருவாக்க வேண்டும் என்ற நிபந்தனை அன்றைய உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேல் அவர்களால் வலியுறுத்தப்பட்டது. ஆனால் அந்த நிபந்தனைகள் எல்லாம் காற்றில் பறந்துவிட்டன.

‘இந்துமதம்’ பதிவு செய்யப்பட்டதா? என்று ஆர்.எஸ்.எஸ் த.லைவர் மோகன் பகவத் கேட்டிருக்கிறார். இதன் பொருள் இந்துக்கள் அனைவரும் ஆர். எஸ்.எஸ் உறுப்பினர்கள்தான் என்பது தானே? ஒவ்வொரு இந்துவுக்கும் அடையாளத்தை அவர்கள்தான் நிர்ணயிப்பார்கள் என்றால் அதற்கு பெயர்தான் பாசிசம். வர்ணாஸ்மர சமூக அமைப்பே தங்களது கடவுள் என்கிறது ஆர்.அஸ்.எஸ்; தத்துவ தந்தை கோல்வால்கர் வர்ணாஸ்மர அமைப்புக்குள் வாழும் இந்து சமூகம் என்ற உயிருள்ள இந்துக்கள் தான் தங்களுடைய கடவுள் என்றும் மற்றபடி இராமன், கிருஷ்ணன், சிவன் போன்ற உருவங்கள் வர்ணாஸ்மரத்தை பாதுகாக்கும் ஆயுதங்கள் தான் என்று சொல்கிறார்.

ஆர்.எஸ்.எஸ்-ன் சட்டமீறலை பகிரங்கமாக அங்கீகரிக்கும் ஒன்றிய பாஜக ஆட்சி, பதிவு செய்து செயல்படும் தொண்டு நிறுவனங்களை முடக்குவதற்கும், ஒரே உத்தரவின் மூலம் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் வழி வகுக்கும் FCRA மசோதாவை கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. பல தொண்டு நிறுவனங்களை சிறுபான்மையினர் குறிப்பாக கிறிஸ்தவர்கள் நடத்துகிறார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டலில் கொண்டு வரப்பட்டுள்ளது இந்த மசோதா. 2014 முதல் 2026 வரை எந்த முறையான காரணங்களும் இன்றி 22,000 தொண்டு நிறுவனங்களின் உரிமைகளை ரத்து செய்து இருக்கிறது ஒன்றிய பாஜக ஆட்சி. இந்த நிறுவனங்கள் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள்,ஆதரவற்றோர் இல்லங்கள் போன்ற அமைப்புகளை நடத்தி வந்தார்கள். இதில் பணியாற்றிய பல ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளார்கள்.

அமெரிக்காவில் செயல்படும் பன்னாட்டு மத சுதந்திர ஆணையம் 2025 ஆம் ஆண்டு ஆர்.எஸ்.எஸ். அமைப்பை அமெரிக்காவில் தடை செய்ய வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டது. இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிராக மத சுதந்திரத்தை முடக்கும் திட்டங்களை உருவாக்கி செயல்படுவது ஆர்.எஸ்.எஸ். என்று அந்த அறிக்கை குற்றம் சாட்டியது. இந்தியாவில் மூன்று முறை தடை செய்யப்பட்ட அமைப்பு; காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்ட அமைப்பு; பெண்களை உறுப்பினராக அனுமதிக்க மறுக்கும் அமைப்பு; இந்தியாவில் எந்த சட்டத்தின் கீழும் எங்களை கட்டுப்படுத்த முடியாது என்று அறிவிக்க முடிகிறது என்று சொன்னால் அதற்கு ஒரே காரணம் பார்ப்பனியம் என்ற இறுமாப்பு. இந்திய ஆட்சி அதிகாரம் எந்த மையப் புள்ளியில் இயங்குகிறது என்பதை இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும்.

## "சவுண்ட் - ஆக்ஷன் "டயலாக்"

*ரசிகர்களை வெறியூட்டுவதற்கும் உசுப்பேற்றுவதற்கும் தயாரிக்கப்பட்ட பேச்சுகளை பேசி பழக்கப்பட்டவர் விஜய். இப்போது முதல்வர் பதவிக்கு வந்த பிறகும் அதைத் தவிர வேறு எந்த பேச்சையும் அவரால் பேச முடியவில்லை. எனவே தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் அவையை விட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்பது அவரது முதல் பிரச்சினையாக இருந்தது. அதற்காகவே வசைச் சொற்களை வீசினார் ; எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த பிறகு தான் அவருக்கு நிம்மதியும் மகிழ்ச்சியும் கிடைத்தது" அப்பாடா; இனி ஸ்கிரிப்ட்டை ரசிகர்களிடம் பேசுவது போல் பேசலாம் என்ற நிம்மதி பெருமூச்சு அவருக்கு வந்திருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் ரசிகர்கள் அல்ல! அவர்கள் முதல்வர் விஜயின் பேச்சுக்கு விசில் அடித்து கைதட்டி ஆரவாரம் செய்ய சட்டமன்றத்திற்கு வரவில்லை என்பதை அவருக்கு பேச்சு தயாரித்து கொடுத்தவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.*

*விஜய் வருகைக்கு முன் தங்கள் அலுவலகத்துக்கு சோபா வந்தது என்பதை சில தலைவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; இதற்கு முதல்வர் விஜய்யிடம் இருந்து ஏன் திட்டவட்டமான மறுப்பு வரவில்லை? பூசி மெழுகி அதை கடந்து செல்வதற்கு இவர் ஏன் முயற்சிக்கிறார்? தமிழ்நாடு அரசு நிகழ்ச்சிகளில் "தமிழ்த்தாய் வாழ்த்து" பாடி தொடங்கும் மரபு தமிழ் நாட்டில் நீடிக்கிறது. "தமிழ்த்தாய் வாழ்த்து" தான் தமிழ்நாடு அரசின் பாடல் என்று திராவிட மாடல் ஆட்சி நடத்திய மு.க.ஸ்டாலின் அரசு ஆணையும் பிறப்பித்திருக்கிறார். அதேபோல் சட்டமன்ற நிகழ்வு தொடங்குவதற்கு முன்பும் "தமிழ்த் தாய் வாழ்த்து" தான் பாடப்பட்டு வந்தது இதில் "ஜன கன மன" தேசிய கீதத்தை ஏன் இணைக்க வேண்டும் ? "வந்தே மாதரம்" பாடலைப் போல் தமிழ் வாழ்த்துப் பாடலும் ஒரு விருப்ப தேர்வுதானே தவிர சட்டபூர்வ தமிழ்நாட்டுக்கான பாடல் அல்ல ; தேசிய கீதமே சட்டபூர்வமான பாடல் என்ற கருத்தியலை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.*

*மாநில உரிமையை அடகு வைத்து விட்ட இந்த செயலை மறைப்பதற்கு ஒரு ஆதாரத்தை தேடித் தேடி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதாவது சட்டமன்றத்தில் கலைஞர் படத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் பங்கேற்றபோது முதலில் தேசிய கீதமும் பிறகு தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப் பெற்றது என்று முதலமைச்சர் விஜய் கூறுகிறார். இந்த ஓட்டைவாதம் மக்களிடம் எடுபடாது என்பதை தெரிந்து கொண்ட அவரே இதற்கான பதிலையும் கூறிவிட்டார் குடியரசுத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சி என்பதால் தேசிய கீதம் பாடி இருக்கலாம் என்று அவரே அதற்கு விளக்கமும் கூறியிருக்கிறார். பிறகு இதில் குற்றம் சாட்டுவதற்கு என்ன இருக்கிறது?*

*சொல்லப்போனால் இந்திய அரசியல் சட்டத்தின் படி இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் தொடக்கத்திலும் இறுதியிலும் தேசிய கீதம் மட்டுமே பாடப்பட வேண்டும் என்று இருந்த மரபை தமிழ்நாடு அப்படியே ஏற்காது ; தேசிய கீதத்தோடு தமிழ்த்தாய் வாழ்த்தையும் இணைத்து இங்கே பாட வேண்டும் என்று அதிலும் மாநில உரிமையை நிலைநாட்டி இருக்கிறார் அன்றைய முதல்வர் மு.க ஸ்டாலின். இதற்கு நேர் மாறாக தமிழ்நாடு சட்டமன்ற மரபுகளை மாற்றி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலோடு தேசிய கீதத்தையும் கொண்டு வந்து இணைத்து தமிழ்நாட்டின் தனித்துவமான அடையாளத்தை சிதைத்து இருக்கிறார் முதல்வர் விஜய்.*

*எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரையில் எடுத்து வைத்த எந்த குற்றச்சாட்டுக்கும் முதல்வரிடம் இருந்து பதில் வரவில்லை.மாறாக வசை மொழிகளை முதல்வர் என்ற தகுதியிலிருந்து கீழே இறங்கி வீசி இருக்கிறார். எதிர்க்கட்சிகள் இல்லாத போது அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை பேசலாமா? என்று அவரே கேட்டுக் கொண்டு அதற்கு பேரவை தலைவர் அனுமதியையும் வாங்கிக்கொண்டு பிறகு தனது "ஜிக்கு புக்கு" வசனங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.பொதுவாக சட்டமன்ற உரைகளில் மேடைப் பேச்சு போல உரத்த குரலில் முதல்வர்கள் பேசுவதில்லை. ஆனால் எதிர்க்கட்சிகள் காதில் விழ வேண்டும் என்பதற்காக உரத்த குரலில் பேசுகிறேன் என்றும் அதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்றும் உலக சட்டமன்ற வரலாற்றில் எந்த முதலமைச்சரும் கேட்காத ஒரு அனுமதியை முதல்வர் விஜய் கேட்டு அதற்கு பேரவைத் தலைவர் அனுமதியும் வழங்கிய ஒரு அதிசய காட்சியும் சட்டமன்றத்தில் நிகழ்ந்திருக்கிறது.*

*இத்துடன் கூடுதலான ஒரு கோரிக்கையையும் முதலமைச்சர் வைத்திருக்கலாம்; உரத்த குரலில் பேசும்போது அவையில் ஒலிபெருக்கிகளை அணைத்து விட வேண்டும் என்றும் கேட்டு இருக்கலாம். அதேபோல் உரையின் இறுதியில் தான் ஒரு "ஆக்க்ஷன்" நடிப்பு செய்யப் போவதாகவும் அதற்கு பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். உடனே பேரவைத் தலைவர் உங்கள் விருப்பப்படி எந்த "ஆக்க்ஷனையும்" செய்து கொள்ளுங்கள் என்றும் அனுமதி அளித்திருக்கிறார். முதல்வர் விஜய் நிகழ்த்திய அந்த ஆக்க்ஷன் என்ன தெரியுமா? கழுத்தை சீவுவது போல ஒரு ஆக்க்ஷன்! பின் வரிசையில் அமர்ந்திருந்த அவரது கட்சி உறுப்பினர்களும் இந்த அரியகாட்சியை கண்டு ரசிப்பதற்கு ஒரு டிஜிட்டல் திரையை ஏற்பாடு செய்திருக்கலாம். பேரவைத் தலைவர் இந்த ஆக்க்ஷனை சபை குறிப்பேட்டில் எப்படி பதிவு செய்யப் போகிறார் என்பது தெரியவில்லை! ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தொலைக்காட்சியில் இந்த ஆக்ஷனை நேரில் பார்த்திருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு இப்படி ஒரு முதலமைச்சரா என்று தலைகுனிய வைத்து விட்டது முதல்வரின் சவுண்ட் - ஆக்ஷன்-டயலாக்.*

**விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**
*23.06.2026*

# அய்.அய்.டி-களில் நடக்கும் ‘மறுபிறவி’ ஆராய்ச்சிகள்

கடந்த சில ஆண்டுகளாக, "இந்திய அறிவு முறை" (Indian Knowledge System -IKS) என்ற திட்டம் குறித்த மூடநம்பிக்கையை பாரம்பரிய இந்திய அறிவு முறை என்ற பெயரில் மறுபிறவி கருத்துக்களை நவீன கல்விப் பாடத்திட்டங்களுடன் ஒருங்கிணைக்க முயன்று வருகிறது.

**இந்திய அறிவுசார் முறை என்ற பெயரில் அய்.அய்.டிகளில் போலி அறிவியல் பாடமாக கற்பிக்கப்பட்டு இந்துத்துவா பழமை வாதத்துக்கு உயிர் கொடுப்பதை விளக்குகிறது இக்கட்டுரை.**

கடந்த கால வரலாறுகளைப் பேசுவது தவறு அல்ல! ஆனால் மதம் சார்ந்த பழமை கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பாணினியின் மொழி ஆய்வு, நியாய (Nyaya)வாதம், , இரும்பின் பயன்பாடு போன்றவற்றில் கவனம் செலுத்தியிருக்கலாம். ஆனால் தற்போது என்ன நடக்கிறது? மாண்டி அய்.அய்.டி இயக்குநர் லட்சுமிதர் பெஹேராவின் தலைமையின் கீழ் அமைத்த குழு புராணங்களை வரலாறாகக் கருதுதல், சடங்குகளை தொழில்நுட்பமாக திரித்துக் கூறல் போன்ற பாடத்திட்டங்களை பரிந்துரைக்கிறது. அறிவியல் அடிப்படையில் மறுக்கப்பட்ட மூடநம்பிக்கைகளுக்கு அறிவியல் முலாம் பூசுகிறது. 2020 - ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை இந்த போலி அறிவியலுக்கு ஏற்பு வழங்கியுள்ளது.

தற்போது அய்.அய்.டி காரக்பூர், அய்.அய்.டி காந்திநகர், அய்.அய்.டி பம்பாய் மற்றும் அய்.அய்.டி கான்பூரில் இந்திய அறிவு மய்யங்கள் உள்ளன. குறிப்பாக கான்பூர் மற்றும் மாண்டி மய்யங்கள் "நனவு" (Consciousness), மறுபிறவி மற்றும் "வேத உயிரியல்" குறித்த "ஆராய்ச்சிகளில்" இறங்கியுள்ளன. இந்த போலி அறிவியல் ஆதரவாளர்கள், "இந்திய மனதை காலனித்துவ சிந்தனையிலிருந்து விடுவிக்க" முயல்கிறோம் என்று கூறுகின்றனர். இது நகைப்புக்குரியதாகும். 19-ஆம் நூற்றாண்டின் வங்காள மறுமலர்ச்சிக் காலத்தில், ஜெகதீஷ் சந்திர போஸ் மற்றும் பிரஃபுல்ல சந்திரா போன்ற ஆளுமைகள் இந்திய அடையாளத்தையும் அறிவியல் ஆராய்ச்சியையும் ஒருங்கிணைத்தனர். காலனித்துவ நீக்கம் என்ற பெயரில் போலி அறிவியலுக்கான கதவைத் திறக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியதோடு தங்கள் முடிவுகளை அறிவியலாக நிரூபித்தனர். ஆனால் இந்திய அறிவு மய்யங்கள், புராண அடிப்படையிலான ஆய்வுகளை அய்.அய்.டி-களின் கட்டமைப்பிற்குள் பதியச்செய்ய முயல்கின்றன. நிறுவனங்களின் மதிப்பையும் புகழையும் பயன்படுத்தி, தங்களின் அரசியல்-மதக் கோட்பாடுகளுக்கு அறிவியல் நம்பகத்தன்மை இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்க விரும்புகின்றன.

சமீபத்தில், அய்.அய்.டி மாண்டி மற்றும் அய்.அய்.டி கான்பூர் ஆகியவை மறுபிறவியின் "அறிவியல்" குறித்த ஒரு "சிறப்பு அமர்வை" நடத்தின. குழந்தைகளின் "முந்தைய பிறவி நினைவுகளை" கண்டறிய முடியும் என்றும். ஜோதிடப் பிறப்புச் சக்கரங்களை பயன்படுத்தலாம் என்றும் கருத்தரங்குகளை நடத்தினார்கள். இந்த நிகழ்வில், அமெரிக்காவின் விர்ஜீனியா பல்கலைக்கழகத்தின் சர்ச்சைக்குரிய அமைப்பிலிருந்து பேச்சாளர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு உயர்கல்வித் துறைக்கு ஒரு நெருக்கடியாக அமைந்தது. போலி அறிவியல் தற்போது முழுமையாக காவி நிறுவன ஆதரவைப் பெற்றுள்ளது. இதில் பங்கேற்ற அய்.அய்.டிகள், தங்களின் கல்வி நம்பகத்தன்மையை மதக் கோட்பாடுகளுக்காக பரிமாறத் தயாராக இருக்கின்றன.

அந்த நிகழ்வில் பங்கேற்ற "ஆராய்ச்சியாளர்கள்", வட இந்தியாவில் உள்ள 6-வயது குழந்தையின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒரு உலகளாவிய ஆன்மிகக் கோட்பாட்டிற்கான "முறையான ஆய்வு முறையை" உருவாக்குவது குறித்து விவாதித்தனர். சாதாரணமாக இதை ஒரு தனிப்பட்ட சம்பவக் கதை (anecdote) என்பார்கள். ஒரு குழந்தையின் நரம்பியல் பரிசோதனையின் வழியாக மறுபிறவி என்ற கருத்தை "நிரூபிக்க" முடியும் என்று கூறுவது இந்தியத் தத்துவத்தின் சிறந்த மரபுகளுக்கே அவமதிப்பாகும். அந்த மரபுகள் சிறந்தவையாக இருப்பதற்குக் காரணம், அவற்றின் சிந்தனையாளர்கள் தங்களிடம் இருந்த உண்மைகளை மூடநம்பிக்கைகளுக்கு பயன்படுத்தவில்லை.இன்று நமக்குக் கிடைத்துள்ள அறிவியல் ஆதாரங்களை அறிந்திருந்தும், ஒரே ஒரு தனிநபரை மட்டும் ஆய்வு செய்து உடலியல் சோதனை கருவி வழியாக மறுபிறவியை நிரூபிக்க முடியும் என்று கருதுவது அபத்தமானதாகும். நிரூபிப்பதில் கூட மோசடிகள் நடந்துள்ளன.

முனைவர் பட்ட மாணவர்கள் இந்த "சிறப்பு அமர்வில்" பங்கேற்க கட்டாயப்படுத்தப்பட்டனர். சில மய்யங்கள் அய்.அய்.டி நிதியையும் ஆராய்ச்சி உதவியாளர்களையும் பயன்படுத்தி, "பேய்களை வேட்டையாடும்" களப்பணி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டின் பல்கலைக்கழக மானியக் குழு (UGC) வழிகாட்டுதல்களின்படி, உயர்கல்வி மாணவர்கள் அனைவரும் இந்த போலி அறிவியலைக் கற்பது கட்டாயம்; நிறுவனங்களின் பெயர் சீரழிந்து விடும் என்று அறிந்தே அய்.அய்.டி நிர்வாகங்கள் இதை கற்பித்து வருகின்றன. ஏனெனில் அவர்களின் நோக்கம் இந்துத்துவ கருத்தியலுக்கு வலு சேர்ப்பதுதான்.

அய்.அய்.டிகளில் பரவி வரும் போலி அறிவியல், திறமையான இந்திய மாணவர்களை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை நோக்கி நகர்த்துகிறது. இந்த போலி அறிவியல் தங்கள் வளர்ச்சிக்கு பயன்படாது என்று கருதி வெளிநாட்டு பல்கலைகழகத்துக்கு சென்று விடுகிறார்கள். இந்த "சிறப்பு அமர்வுகள்" இந்திய உயர்கல்வியை உலகளாவிய தரநிலைகளிலிருந்து பிரித்துவிடும். இறுதியில், இந்திய அறிஞர்கள் தங்களின் அறிவியல் திறமையால் அல்லாமல், இந்துத்துவ மதவாத கருத்தியலின் ஆதரவாளர்களாக மாறி விடுவார்கள். இந்திய அறிவு முறை மய்யங்கள், புராண அடிப்படையிலான ஆய்வுகளை அய்.அய்.டிகளின் கல்வி மற்றும் ஆராய்ச்சி கட்டமைப்புக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது.

*( ‘இந்து’ ஆங்கில (ஜூன்23,2026) நாளேட்டில் ‘வாசுதேவன் முகுந்த்’ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)*

# பயிலரங்கத்தின் வெற்றி; பயிற்சி பெற்றவர்கள் நெகிழ்ச்சி

முதல் பக்க தொடர்ச்சி..

**சேலம் பயிலரங்கத்தில் பங்கேற்றவர்கள் நிகழ்வின் இறுதியில் பயிலரங்கம் குறித்து தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.**

**நாமக்கல் ரேஷிகா வர்சினி:** பெரியார் குறித்த எனக்குத் தெரிந்த விவரங்களைத் தாண்டி பெரியார் பற்றிய வரலாறுகளை விரிவாக கற்றுக் கொள்ள முடிந்தது. இது என்னுடைய படிப்புக்கு உதவியாக இருக்கும். நான் பார்ப்பனரல்லாத குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அனைத்து சடங்குகளையும் பின்பற்றி வந்தது என்னுடைய குடும்பம். இந்த பயிலரங்கத்துக்கு வந்ததற்குப் பிறகு விடுதலை அடைந்த உணர்வை எட்டி இருக்கிறேன். இனி நல்ல வாழ்க்கை முறைக்கு ஒரு வழி கிடைத்திருக்கிறது. அதற்கு காரணம் பெரியார் தான் என்று கூறினார்.




**இசக்கி ராஜன் (திருநெல்வேலி):** இங்கே வருவதற்கு முன் பெரியார் குறித்த நான் நிறைய படித்திருக்கிறேன் என்று நினைத்து இருந்தேன். ஆனால் இங்கே தோழர்கள் பேசியதற்குப் பிறகு நான் இன்னும் படிக்காதது நிறைய இருக்கு என்று உணர்ந்து கொண்டேன். ஜாதி குறித்தும் சடங்குகள் எப்படி பெண்கள் வழியாக கடத்தப்படுகிறது என்பது பற்றியும் பெரியாரின் போராட்ட வரலாறு குறித்தும் புதிய செய்திகளை அறிந்து கொண்டேன்.



**சஞ்சய் :** நான் சேலத்தைச் சேர்ந்தவன் தான். ஓமலூர் பக்கத்துல புளியம்பட்டி என்கிற ஒரு ஊரு. எங்க வீட்டுல ஒரு அம்பேத்கர் படம் இருக்கும். அந்த படம் எங்க அப்பா அம்மா கல்யாணத்துல பரிசா கொடுத்தது. சின்ன வயசுல இருந்தே அந்த படத்தை பார்த்து வந்ததுனால எனக்கு அம்பேத்கர் பரிச்சயமானவர். ஆனா பெரியார் எனக்கு பரிச்சயம் கிடையாது. அவர் படத்தை நான் புத்தகத்தில் பார்த்ததோடு சரி, வேற எங்கேயும் நான் பார்த்தது கிடையாது. இப்படி இருக்கும்போது தோழர் கொளத்தூர் மணி நான் படித்த பள்ளியில் சான்றிதழ் வழங்கும் விழாவுக்கு வராரு. அப்பதான் வந்து கொளத்தூர் மணி அவர்களை முதல்ல சந்திக்கிறேன். அதுக்கப்புறம் தான் பெரியார் யாரு, பெரியார் என்ன பண்ணாரு, பெரியாரை நாம் ஏன் ஆதரிக்கணும் அப்படிங்கற விஷயத்தை படிக்க ஆரம்பிக்கிறேன். பெரியார் சமத்துவம், பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு, பார்ப்பன எதிர்ப்பு போன்ற கொள்கைகள் மேல் எனக்கு ஈர்ப்பு வருது. முக்கியமா பெண் அடிமைத்தனம் ஒழிப்பது சாதாரணமா எங்க வீட்டிலேயே நடக்கக்கூடியது தான். இன்னைக்கு கூட எங்க வீட்டுல சண்டை போட்டுட்டு தான் வந்தேன். ஏன்னா எங்க அப்பா வீட்டுல ஒரு வேலை செய்யல. அதை எங்க அம்மா கேட்கும்போது, "அது பொம்பளை வேலை, நான் எதுக்கு செய்யணும்?" அப்படின்னு சண்டை போட்டார். இப்ப நான் அதை எதிர்த்து கேள்வி கேட்கிறேன். ஏன் வேலையில் கூட ஆம்பள, பொம்பளைன்னு இருக்கா? ஏன் ஆம்பள செஞ்சா என்ன? பொம்பளை தான் செய்யணுமா? அப்படின்னு எங்க அப்பா கிட்ட சண்டை போட்டேன். எங்க அம்மாவுக்கு ஆதரவா, என்னைப் பெற்ற என்னுடைய தகப்பனையே எதிர்த்து நான் கேள்வி கேட்கிறேன். இந்த விழிப்புணர்வு கொடுத்தது பெரியாருடைய கொள்கை தான்.



பெற்றோரா இருந்தாலும் அந்த இடத்தில் கேள்வி கேட்கணும்னு நம்மளை ஒரு கருத்தியல் தள்ளுது பாத்தீங்களா? இந்த உந்துசக்தி தான் எல்லாருக்கும் தேவை. பொதுவாவே பெற்றோர்கள் எல்லாருக்கும் ஒரு பயம் இருக்கும். பையன் நல்லா படிக்கணும், படிச்சு செட்டில் ஆகணும்னு எல்லாரும் ஆசைப்படுவாங்க. அதே போல தான் எங்க வீட்டிலயும். இப்ப அவங்களைப் பொருத்தவரை சஞ்சய் வந்தான், ரெண்டு நாள் ஏதோ மீட்டிங்னு போனான், வீட்டுல தங்கல, வீட்டுல சாப்பிடல அப்படிங்கறது மட்டும் தான் அவங்களுக்கு தெரியும். இங்க நான் எப்படிப்பட்ட மனிதர்களை சந்திக்கிறேன், ஒரே கொள்கை உடைய மக்களை நான் சந்திக்கும்போது அந்த சூழ்நிலை எப்படி இருக்கு, அந்த அனுபவம் எப்படி இருக்கு அப்படிங்கறது சொல்லிப் புரிய வைக்க முடியாத ஒரு உணர்வு. ஒரே கருத்தியல் கொண்ட பல மக்களை ஒரே இடத்தில் பார்த்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. இந்த உணர்வு ஒரு புது உணர்வா இருக்கு. இப்படி வீட்டுல தங்காம நீ பாட்டுக்கு போயிட்டு இருக்க அப்படின்னு சொல்லி திட்டுனாங்க. தப்பா போயிடுவேன்னு பயந்தாங்க. அப்ப நான் அவங்க கிட்ட ஒரு விஷயம் தான் சொல்லிட்டு வந்தேன். "உன் பையன் தண்ணி அடிக்க போகல, ஊர் சுத்தப் போகல, பொறுக்கித்தனம் பண்ணப் போகல. அரசியல் பண்போடு, பகுத்தறிவு சிந்தனையோடு உள்ள சிந்தனையாளர்களையும் பகுத்தறிவுவாதிகளையும் பார்க்கத்தான் போயிருக்கேன்"னு சொல்லிட்டு வந்தேன். இந்த சந்திப்பு எனக்கு எப்படி வாழ்க்கையில் ஒரு பக்குவப்பட்ட மனிதனா வாழணும்னு எனக்கு உணர்த்தி இருக்கு.

## நிலாச்சோறு உணவக உரிமையாளர் தோழர் ரகுநாத் அவர்களின் குடும்பப் பின்னணி:

1950 அக்டோபரில் பெரியார் அறிவித்த வடவர் சுரண்டல் எதிர்ப்புப் போராட்டத்தில் 8.11.1950 அன்று தோழர் ரகுநாத் அவர்களின் பாட்டியும் சேலம் சிவதாபுரம் திராவிடர் கழகத்தின் பொருளாளருமான அகிலாண்டம் அவர்களும், அவரது மாமனார் 80 வயது உள்ள மாரி அவர்களும், அவரது குழந்தைகள் ஆன 13வயது சரஸ்வதி, 10 வயது சொர்ணாம்பாள், 8வயது ஜெகநாதன், 3வயது திராவிட கனி, 1,1/2 ஒன்றரை வயது பாண்டியராசா ஆகியவர்களுடன் கைதாகிறார். அதில் குழந்தைகளில் 1,1/2 வயது பாண்டிராசாவைத் தவிர மற்ற நால்வரையும் அன்னையை விட்டுப் பிரித்து Children’s Society-யில் தனியாக காவலில் வைக்கப்படுகிறார்கள். ஒரு வார தண்டனைக்குப் பின் விடுதலையான அகிலாண்டம் அம்மாள், அவரது கணவரும் சேலம் சிவதாபுரம் காட்டூர் திராவிடர் கழக தலைவருமான எஸ் எம் வெள்ளியங்கிரி அவர்களும் 21.11.1950 அன்று மீண்டும் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதாகி உள்ளார்கள். ஒரு மாதம் தண்டனை வழங்கப்பட்டு 22.12.1950 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

16.5.1983 அன்று தங்கள் வீட்டில் ‘சமபந்தி போஜனம்’ என்ற பெயரில் ஏற்பாடு செய்து, ஜாதி, மதம் கடந்து அனைத்து தரப்பினரையும் கலந்து கொள்ளச்செய்து ஆட்டுக்கறி துண்டுகளும், மாட்டுக்கறி துண்டுகளும், பன்றிக்கறி துண்டுகளும் கொண்ட விருந்து வழங்கப்பட்டுள்ளது.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# பொன்னம்பலனார் நடத்திய கொள்கைப் போராட்டங்கள்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். உடையார்பாளையம் பொன்னம்பலனார் குறித்து எழுதிய கடந்த இதழில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி...**

வேலூர் கந்தசாமி கண்டர் பள்ளியில், பொன்னம்பலனார் பணியாற்றிய காலத்திலேயே தனது சொந்த ஊரான செந்துறையில் இருந்து ஆண்டுக்கு, ஏழெட்டு மாணவர்களை அழைத்துச்சென்று, பரமத்தி வேலூரில் தன் வீட்டிலேயே தங்கவைத்து, அவர்களைப் படிக்கவைத்தார். பின்னர், அங்கிருந்து பணியில் நீக்கப்பட்டபோது, சேலத்தில் பணி வழங்கிட அவருக்குப் பரிந்துரைத்தவர் தந்தை பெரியார். கந்தசாமி கண்டர் பள்ளியில் இருந்து பொன்னம்பலனார் நீக்கப்பட்டபோது, அவரோடு ஏழு ஆசிரியர்கள் வேலையை விட்டுவிட்டனர். ஏறத்தாழ 6 ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின்னர், முசிறிக்குப் பணி மாறுதல் அடைந்தார்.


தன்மானத் தமிழ் மறவர்
கீ.வை.பொன்னம்பலனார்

அப்போது, திருச்சியில் பெரியாரின் கூட்டம் எங்கு நடைபெற்றாலும், பொன்னம்பலனார் சென்று விடுவார். இவர் பணியாற்றிய பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தவர் சுப்புசாமி அய்யர். அந்தக் காலத்தில் பள்ளியில் இறைவணக்கப் பாடலும் நாட்டுப்பண்ணும் தலைமை ஆசிரியர் விருப்பப்படியே பாடப்படும். 10.11.1952 அன்று காலை, பாரதியாரின் ‘வாழிய செந்தமிழ்’ பாடல் பாடப்பட்டது. அந்தப் பாடலில், ‘ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!’ என்ற வரிகளை மாணவர்கள் பாடியதைக் கேட்டதும் ‘நிறுத்துங்கள்’ எனக் குரல் கொடுத்தார் பொன்னம்பலனார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த தலைமை ஆசிரியர், ‘டேய் ஃபூல்’ எனத் திட்ட, ‘தமிழாசிரியரின் மானம் காக்க ஆரிய ஆசான் மன்னிப்பு கேட்க வேண்டும்’ என வலியுறுத்தினார்.

மாணவர்கள் பலர், தலைமை ஆசிரியரை விட தமிழாசிரியர்மீது பேரன்பு கொண்டிருந்ததால், ‘தமிழ் வாழ்க, தமிழாசிரியர் வாழ்க, ஆரிய ஆசிரியரே மேடைக்கு வா’ என முழக்கமிட்டனர். பின்பு மாணவர்களை அமைதிப்படுத்தி, வகுப்புகளுக்கு அனுப்பினார் பொன்னம்பலனார். ஆனால், மறுநாளே பணிநீக்க ஆணை கிடைத்தது. இதை அறிந்த மாணவர்கள், ஊர்வலம் நடத்தி பொன்னம்பலனாருக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கிட, இணையதளம் இல்லாத அந்தக் காலத்திலேயே தமிழ்நாடு முழுக்க செய்தி சென்று சேர்ந்தது. இது ‘இராவண - ஆரியப் போராட்டம்’ என ‘விடுதலை’ கட்டுரை தீட்ட, விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றது. பொன்னம்பலனாருக்கு ஆதரவாக இருந்த மூன்று ஆசிரியர்கள், வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

23 மாத சட்டப் போராட்டத்துக்குப் பிறகு, பொன்னம்பலனாரின் பணிநீக்கம் செல்லாது, 23 மாத ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வந்தது. அப்போதுதான், முசிறியில் இருந்து தனது சொந்த ஊரான செந்துறைக்கு வந்து சேர்ந்தார் பொன்னம்பலனார். ஆனால், திருச்சி முழுவதும் பரவலாக அறியப்பட்ட முகமாக மாறியிருந்தார் பொன்னம்பலனார். இத்தனை இடையூறுகளுக்குப் பிறகு மீண்டும் பணியில் சேர்ந்திருந்தாலும், கருப்புச்சட்டையும் ‘விடுதலை’ நாளிதழும் இல்லாமல், அவர் பள்ளி வளாகத்தில் ஒருநாளும் கால்வைத்ததில்லை. பாவேந்தர் பாரதிதாசனின் சீடரும் ‘முல்லைச்சரம்’ இதழின் ஆசிரியருமான கவிஞர் பொன்னடியான், திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழியின் தந்தை அண்ணாமலை ஆகியோர் செந்துறை பள்ளியில், பொன்னம்பலனார் ஆசிரியராக இருந்த காலத்தில் படித்தவர்கள். பள்ளி ஆண்டு விழா, இலக்கிய மன்ற விழாக்களில் பெரியாரும் பாவேந்தரும் பாவாணரும்தான் சிறப்பு அழைப்பாளர்களாக இருப்பார்கள். அப்போது கல்வி அதிகாரியாக இருந்தவர் நெ.து. சுந்தரவடிவேலு என்பதால், எதைப் பற்றியும் கவலைப்படாமல் துணிந்து செயல்பட்டார்.


செந்துறை பள்ளியில், பொன்னம்பலனார் பணியாற்றிய 1954-1957-ஆம் ஆண்டு வரையிலும் அங்கு தலைமை ஆசிரியராக இருந்தவர் பார்ப்பனர். அவருக்கு தமிழும் பிடிக்காது, தமிழாசிரியரும் பிடிக்காது. தமிழ்ப்பண் பாடப்படுவதை நிறுத்தினார், அந்தத் தலைமை ஆசிரியர். அப்போது மாணவர் தலைவராக இருந்தவர் பொன்னடியான். அதனால், பள்ளியிலேயே ஒரு மொழிப்போர் மூண்டது. பொன்னடியான் பின்னால் மாணவர்கள் அணிவகுத்து எதிர்ப்புக் கரம் கோர்க்க, தலைமை ஆசிரியர் கொட்டம் அடங்கி, அனைத்தும் தனித்தமிழ்மயமானது. இந்த மொழிப்போராட்டத்தை ‘விடுதலை’ ஒவ்வொரு நாளும் செய்தியாக்கி, தமிழ்நாடு தழுவிய அளவில் கவனம் ஈர்க்கச் செய்தது.

வருகைப் பதிவின்போது, ‘பிரசன்ட் சார்’ என்று சொல்கிற வழக்கத்தை மாற்றி, ‘உள்ளேன் அய்யா’ என்று மாணவர்களைச் சொல்லவைத்தார். அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் வகுப்பில் ‘உள்ளேன் அய்யா’ என்று மாணவர்கள் சொல்வது நிரந்தர வழக்கமாகிவிட்டது. ‘நேர் நில்’, ‘பாடுக’, ‘செல்க’ என அனைத்தும் தமிழானது. பள்ளிக்கூடத்தில் மட்டுமல்ல, ஊரிலும் ஜாதிய முறைக்கு எதிரான துணிச்சலான செயல்களில் ஈடுபட்டார். சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமையேற்று நடத்தி வைத்தார். 1957-இல் சேலம் தமிழ்ப்பேரவை சார்பில், 500 வெண் பொற்காசுகளை பெரியார் வழங்கி, தமிழ் மறவர் பட்டத்தையும் அவருக்குச் சூட்டினார். இந்த நிகழ்ச்சியில்தான் தேவநேயப் பாவாணருக்கு ‘திராவிட மொழி நூல் ஞாயிறு’ பட்டமும் வழங்கப்பட்டது.

1959-ஆம் ஆண்டு, பள்ளியில் ஒரு நாள் அவர் பாடம் நடத்திக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த கல்வி அலுவலர் ரத்தின சாஸ்திரி, உடனடியாக பொன்னம்பலனாரை அரவக்குறிச்சிக்கு இடம் மாற்றிவிட்டார். இதற்கு ஒரே காரணம், அவர் கருப்புச் சட்டையில் இருந்தார் என்பது மட்டும்தான். “உமது முடி கருப்பாக இருக்கிறதே? அதை நீக்கிவிட்டு நீர் வரலாமே!” என அந்தக் கணமே பதிலடி கொடுத்தார் பொன்னம்பலனார். அரவக்குறிச்சியிலும் தலைமை ஆசிரியருடன் இணைந்து காமராசர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டத்திற்காக மாலை வேளைகளில் அரிசி, நெல் வாங்கி வருவது எனச் செயல்பட்டுள்ளார் பொன்னம்பலனார். அரவக்குறிச்சி தலைமை ஆசிரியர் பொன்னம்பலனாருக்கு நண்பர் என்பதால், பொன்பரப்பிக்கு மாறுதலாகி வந்துவிட்டார். பணி ஓய்வுக்குப் பிறகு, செந்துறையில் அவரின் பெரியாரியப் பணி நீண்டது. இறுதியில் புற்றுநோய் காரணமாக, 2.12.1973 அன்று காலமானார் பொன்னம்பலனார். அந்த நாளில் அரியலூர் மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்துக்கும் விடுமுறை அளிக்கப்பட்டு, அவரிடம் பயின்ற ஆசிரியர்கள், ஆயிரக்கணக்கான மாணவர்கள் புடைசூழ, இறுதி ஊர்வலம் நடைபெற்றது. சென்னை, பொது மருத்துவமனையில் அவர் சிகிச்சையில் இருந்த காலகட்டத்தில் பெரியார் அவரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

பொன்னம்பலனார் மறைந்த அதே மாதம் 24-ஆம் நாள், பெரியாரும் காலமானார். இருவருக்கும் சேர்த்து கீழமாளிகையில் ஒன்றாகச் சிலை வைத்திருக்கிறார்கள். பொன்னம்பலனார் வெறும் தமிழ் அறிஞராக மட்டும் இல்லாமல், பெரியாரின் பகுத்தறிவுப் போர்வாளாகவும் திகழ்ந்தார். ஆசிரியராக மட்டுமல்லாமல் சமூகத்தைச் சீர்திருத்தும் செயல்பாட்டாளராகவும் திகழ்ந்தார். அவரால் கருப்புச்சட்டை அணிந்த மாணவர்கள் அதை அடுத்தடுத்த தலைமுறைக்கும் கடத்தி, இன்றைக்கும் செந்துறையைத் திராவிட இயக்கக் கோட்டையாகவே வைத்திருக்கிறார்கள்.

## நிமிர்வோம் வாசகர் வட்டத்தில் தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு









நிமிர்வோம் வாசகர் வட்ட 32-வது சந்திப்பு, ஜூன் 14,2026 (ஞாயிறு) மாலை 6 மணிக்கு, கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. வாசகர் வட்டத்தின் அமைப்பாளர் ர.பிரகாசு நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

"தேர்தல் முடிவுகளை எப்படி எடுத்துக்கொள்வது?" எனும் தலைப்பில், தோல்விக்கான காரணங்கள் குறித்தும், மக்களின் முதன்மையான ஊடகமாக மாறியுள்ள சமூக வலைத்தளங்களில் பகுத்தறிவுப் பிரச்சாரங்களை தீவிரமாக முன்னெடுக்கவேண்டிய அவசியம் குறித்தும், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன் உரையாற்றினார்.

"பேருந்து தீண்டாமையை ஒழித்த இயக்கம்!" எனும் தலைப்பில், தோழர்கள் கெம்பனூரில் கள ஆய்வு செய்த அனுபவங்களையும், கோவை கெம்பனூர் வரை வரவிடாமல் தடுக்கப்பட்டிருந்த 21-ஆம் எண் பேருந்தை மீண்டும் வரவைக்க நடந்த போராட்டங்களின் வெற்றி குறித்தும், கோவையில் தலைமைக் குழு உறுப்பினர் நிர்மல்குமார் இணையவழியில் உரையாற்றினார்.

நிறைவாக தலைமையுரையாற்றிய தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், பாஜகவின் சமஸ்கிருத திணிப்பைப் பற்றியும், கடந்த காலங்களில் பெரியார் இயக்கம் முன்னெடுத்த வீரஞ்செறிந்த போராட்டங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார். வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரசாந்த் நன்றியுரையாற்றினார்.

## வேலூரில் கழகம் ஆர்ப்பாட்டம்

1.காவிரி ஆற்றின் குறுக்கே மேக தாதுவில் தடுப்பணை கட்டுவதை தடுத்து நிறுத்தக் கோரியும்,

2.ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே தனிச் சட்டம் இயற்றிக் கோரியும் வேலூர் மாவட்டக் கழகம் சார்பாக 20.6.2026 மாலை குடியாத்தம் பழைய பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




ஆர்ப்பாட்டத்திற்கு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன் தலைமை தாங்கினார். திருப்பத்தூர் மாவட்ட அமைப்பாளர் சுரேஷ் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு மாவட்டத் தலைவர் காத்தவராயன், சிபிஎம் குடியாத்தம் நகரச் செயலாளர் குபேந்திரன், மாவட்டச் செயலாளர் சிவா நந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். முரளி தன்மானன் நன்றி கூறினார். கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் சுமார் 30-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : June 25 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran